மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 204, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஜெ. கோவிந்தராஜன், மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

204—

கால்நடை மருந்தகம்

***4476—திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்:**

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி தொகுதி, பாகல்மேடு ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கும்மிடிப்பூண்டி தொகுதி, பாகல்மேடு ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஜெ. கோவிந்தராஜன் அவர்கள்.

திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில்."

ஒற்றர்கள்மூலம் நாட்டில் நிகழக்கூடிய நிகழ்வுகளை அறிந்து, ஆட்சியைச் செய்கின்ற மன்னவன் அந்த ஆட்சியை சிறப்பிப்பான். அதேபோல, இன்று தமிழகத்தில் மாண்புமிகு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசுத் துறை அதிகாரிகள், ஆலோசகர்கள் என இன்று ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதல்வர் ஆயுட்காலம் வரையில் தமிழகத்தின் முதல்வராக, வழி நடத்த இருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு (மேசையைத்

2022 ஏப்ரல் 29]

தட்டும் ஒலி) கும்மிடிப்பூண்டி தொகுதியின் சார்பாக, என் நெஞ்சார்ந்த வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கும்மிடிப்பூண்டி தொகுதி, எல்லாபுரம் ஒன்றியம், பாகல்மேடு ஊராட்சியைச் சுற்றி புன்னப்பாக்கம், செம்பேடு, காதர்வேடு, தாமரைப்பாக்கம், அத்தங்கி காவனூர், வெங்கல் போன்ற ஊராட்சிகள் இருக்கின்றன. அந்த ஊராட்சிகளில் அதிகளவில் கால்நடைகள் இருப்பதால், பொதுமக்கள் பயன்பெறும்வகையில் பாகல்மேடு ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைத்திட வேண்டும். கால்நடை அலகுகள் 3,000 என அரசு குறிப்பிட்டிருந்தது. இப்போது கால்நடைகள் குறைந்து வருவதால், கால்நடைகளின் அலகைக் குறைத்து, இங்கே மருந்தகம் அமைத்துத் தருமாறு, மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கால்நடைகள் குறைந்து வருகின்றன என்று சொன்னார்கள். இன்றைக்குத் தமிழகத்தில் கால்நடைகள் அதிகமாக வளர்வதற்கான வழிவகைகளைக் காணுகின்ற வகையில் தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவுகளை வழங்கியிருக்கிறார்கள். மேலும், அரசு விதிமுறைகளின்படி, கால்நடை மருந்தகம் நேரடியாகத் துவக்க இயலாது. முதலில் கால்நடை கிளை நிலையம்தான் துவக்க முடியும். அந்த நிலையத்திற்கு நாள்தோறும் 30 கால்நடைகள் மருத்துவச் சேவை மற்றும் இதர சேவைகளைப் பெறுவதற்கு வரும்பட்சத்தில் அந்தக் கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். மேலும், அரசின் விதிமுறைகளின்படி கால்நடை கிளை நிலையம் துவக்க, 3,000 கால்நடை அலகுகள் இருக்க வேண்டும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ள பாகல்மேடு கிராமத்தில் மொத்தம் 141 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய கும்மிடிப்பூண்டி தொகுதி, பாகல்மேடு ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2022 ஏப்ரல் 29

முற்பகல் 10—30

மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட பாகல்மேடு ஊராட்சியிலிருந்து சுமார் 5 கிலோ மீட்டர் தொலைவில் மாகரல் மற்றும் வெளுர் ஊராட்சியில் கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. கால்நடை மருந்தகங்கள் அமைக்க இரண்டு கிளை நிலையங்களுக்கு இடையில் குறைந்தது 3 கிலோ மீட்டர் இடைவெளி இருத்தல் அவசியம். ஆனால், பாகல்மேடு கிராமத்திலிருந்து சுமார் 1.5 கிலோ மீட்டர் தொலைவில் வெங்கல் ஊராட்சியில் ஒரு கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வருகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய கும்மிடிப்பூண்டி தொகுதி, பாகல்மேடு ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஜெ. கோவிந்தராஜன் அவர்கள்.

திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்

தொழுதுண்டு பின்செல் பவர்.'

விவசாயிகளுக்கு, விவசாயத்திற்கு அடுத்ததாக இருப்பது கால்நடைகள். விவசாயம் பாதிக்கும்போது கால்நடைகளைப் பயன்படுத்தித்தான் விவசாயிகள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவு கூர்ந்து. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மறுபரிசீலனை செய்வார்களா எனக் கேட்கிறீர்கள், (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஜெ. கோவிந்தராஜன் அவர்கள்.

திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் சில கோரிக்கைகள். ஏனம்பாக்கம் ஊராட்சியில் புதியதாகக் கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டும். ஆமிதாநல்லூர் ஊராட்சியில் கிளை மருந்தகம் அமைக்க வேண்டும். பூண்டி ஒன்றியம், திம்மபூபாலபுரம் ஊராட்சியில் 15 ஆண்டுகளுக்கு முன் கால்நடை மருந்தகம் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டும், மருத்துவர் நியமனம் செய்யப்படாததால் மருந்தகம் அமைக்கப்படவில்லை. எல்லாபுரம் ஒன்றியம், லச்சிவாக்கம், பேரண்டூர் ஊத்துக்கோட்டையில். . .

2022 ஏப்ரல் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், போதும். கேள்வியை மட்டும் கேளுங்கள்.*

திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்மிடிப்பூண்டியைச் சுற்றியுள்ள தேர்வழி, ஆத்துப்பாக்கம், ஏனாதிமேல்பாக்கம், வழுதலம்பேடு, அயநல்லூர், ரெட்டம்பேடு, குருவாட்டுசேரி, மங்காவரம், நத்தம், ராக்கம்பாளையம் ஊராட்சியில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உங்கள் தொகுதியில் உள்ள ஊர்களையெல்லாம் வாசிக்கிறீர்கள். எந்த ஊரில் மருந்தகம் அல்லது கிளை நிலையம் வேண்டும் என்று கேளுங்கள்.*

திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே மருந்தகம் இருக்கிறது. மருந்தகத்தை மாற்றி மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். ஊராட்சி வளர்ந்து வருகிறது. அந்த ஊராட்சியில் மக்கள் செல்லப்பிராணிகளை அதிகமாக வளர்க்கின்றார்கள். அவர்களுக்குக் கால்நடை மருத்துவமனை அமைத்துக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20—வது கால்நடை கணக்கெடுப்பின்படி கும்மிடிப்பூண்டி தொகுதியில் சுமார் 33,000 மாட்டினங்களும், 87,000 ஆட்டினங்களும், 8,000 கோழியினங்களும், 200 பன்றியினங்களும் உள்ளன. இவற்றிற்கு மருத்துவம் மற்றும் இதர சேவையை வழங்குவதற்காக 17 கால்நடை மருந்தகங்கள் மற்றும் 4 கால்நடை கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற ஊர்களையெல்லாம் எங்களுடைய துறையின்மூலம் ஆய்வு செய்து, அவை அரசினுடைய விதிமுறைகளுக்கேற்றாற்போல் அமையும் என்று சொன்னால், அதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, நம்முடைய*

மாண்புமிகு உறுப்பினர் என்ன கோருகின்றாரோ அதைச் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கும் என்று சொன்னால், அதனை அரசு செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 205, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

205—

பேருந்து வசதி

***4396—திரு. கி. அசோக்குமார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி தொகுதி, காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், சாப்பர்த்தி ஊராட்சி, பந்தேரி கிராமத்திற்குப் பேருந்து வசதி செய்து தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கிருஷ்ணகிரி தொகுதி, காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், சாப்பர்த்தி ஊராட்சி, பந்தேரி கிராமத்திற்குப் பேருந்து இயக்குவதற்கான வாய்ப்பு தற்போது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார் அவர்கள்.*

திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாப்பர்த்தி பஞ்சாயத்திற்குட்பட்ட பந்தேரி கிராமத்தின் சுற்றுப் பகுதியில் பனகமுட்லு, கோவில் கொட்டாய், எம்.ஜி.ஆர். நகர், முத்தூரான் கொட்டாய் ஆகிய கிராமங்கள் உள்ளன. இந்த 4 கிராமங்களிலும் சுமார் 300 குடும்பங்கள் வசிக்கின்றன. பேருந்து நிறுத்தத்திற்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், சாப்பர்த்திக்கு சென்று 2 கிலோ மீட்டருக்கு மேலாக நடந்து சென்று அந்தப் பேருந்து நிறுத்தத்தை அடைய*